

திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி, மாரங்கியூர் ஊராட்சிக்கு மேம்பாலம் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், பெற்றுத்தந்த கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்களுக்கும் கிராம பொதுமக்கள் தங்களது நன்றியை தெரிவித்தனர். மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் நேற்று முன்தினம் (21.02.2024) சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வின் போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் எஸ். நாகராஜன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி. எம்.லக்ஷ்மி, மற்றும் அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் பிறந்த நாள்: பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

# அம்பத்தூரில் - குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர்களுக்கு நல உதவிகள்!

### கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு வழங்குகிறார்! மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி தலைமை!

சென்னை, பிப்.23-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 'மக்கள் முதல்வரின் மனித நேயத் திருநாள்' எனும்- முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை யொட்டி குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்கும் விழா இன்று (23.2.2024 - வெள்ளிக் கிழமை) காலை 8.00 மணியளவில் அம்பத்தூர் - 7-வது மண்டல அலுவலகம் எதிரில், டன்லப் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவர்-தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே. மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு மற்றும் மேயர் பிரியா ராஜன், பகுதிச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., டி.எஸ்.பி. இராஜகோபால், எம்.டி. ஆர். நாகராஜ், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.சாந்தகுமாரி, எல்.பி.எப். மோகன், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, ஜி.வி.நாகவள்ளி, து.ஆயிரம், கு. கிருஷ்ணமூர்த்தி, ஜெ. பாலமுருகன், மா.பச்சையப்பன், அ.திராவிட செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், வி.ரவீந்திரன், பு.வீரா, வெ.ராதா கிருஷ்ணன், மு.இரகு, எம்.கமல் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ப.மதி, எம்.குணசேகரன், மா.குப்புசாமி, க.ஜீவா, கோ.சேகர்லால், பொன். நவராஜ் ரவி, ஆ.இரா. அருண், எம்.ஹரிகிருஷ்ணன், எஸ்.பி. அரிகிருஷ்ணன், பி.வி.மூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் - நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்துகொண்டு, குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்குகிறார்.

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., அம்பத்தூர் தொகுதி தலைமையிடப் பார்வையாளர் பி.டி.சி. செல்வராஜ், ப.ரங்கநாதன், கே.சந்துரு, கே.எஸ்.இரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என். பி.எம்.ஷேக் அப்துல்லா, சி.மகேஷ் குமார், பரிதி இளம்சுருதி, ஆர்.வரதன், கோ. ஏகப்பன்,

தேவஜவகர், வி.எம். தேவன், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், கூ.பீ. ஜெயின், சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமுலு, வே.வாசு, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராசன், சொ.வேலு, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ். முரளி உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

85வது வட்டச் செயலாளர் த.கண்ணபிரான் நன்றி கூறுகிறார்.

### தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்திற்கு

# கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

### மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி.- துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ வேண்டுகோள்!

தஞ்சாவூர் பிப்.23-

தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்திற்கு கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை தர உள்ளதால் அனைத்து தரப்பினரையும் கலந்து கொள்ள வைப்பது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு: தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத்தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, 2024ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க தேர்தல் அறிகககை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணா நிதி எம்.பி, தலைமையில் டி.கே.எஸ். இளங்கோவன், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழநிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் பிப்ரவரி 26ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு தஞ்சை - நாகை சாலையில் உள்ள குருதையாள் சர்மா திருமண மண்டபத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதுசமயம் தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்தை சேர்ந்த தொழில்துறையினர், வியாபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து அவர்களை தஞ்சைக்கு அழைத்து வர உரிய ஏற்பாடுகளை அந்தந்த மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் செய்ய கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.-கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளனர்.

### 2024 - நாடாளுமன்றத் தேர்தல் காணொலி வாகன பிரச்சாரம்

# உதகையில் மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் துவக்கி வைத்தார்!

உதகை, பிப்.23-

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, தலைமைக் கழகம் சார்பில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் LED திரை பொருத்திய கழக அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு தெரிவித்திடும் பிரச்சார வாகனம் அனுப்பிய வைக்கப் பட்டுள்ளது.

இதனை உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உதகை நகர பகுதியில் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி உதகை ஏ.டி.சி., திடல் அருகில் உதகை நகர செயலாளர் ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட திமுக செயலாளர் பா. மு.முபாரக் பிரச்சார நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், உதகை வடக்கு ஒன்றிய செயலாளர் காமராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் தொரை, பில்லன், மோகன்குமார், சதக்கத்துல்லா, உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, ரஹமத்துல்லா, நகர அவை தலைவர் கோபி, நகர துணை செயலாளர்கள் ரீட்டா மேரி, கார்டன் கிருஷ்ணன், நகர பொருளாளர் அணில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் கார்திக், தம்பி இஸ்மாயில், வெங்கடேஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நாகராஜ், ரமேஷ், கீதா, மேத்யூஸ், ரகுபதி, கஜேந்திரன், மார்கெட் ரவி, சசிகுமார், வஹாப், தியாகு, ஆட்டோ பாபு, வெங்கடேஷ், செல்வராஜ், கோபால், தருமன், குண்டன், காளி, உதகை நகர மன்ற உறுப்பினர்கள் விஷ்னு, பிரியா, மேரி பிளோரீனா, கிளை செயலாளர்கள் நிர்வாகிகள், ரவி, பாரதிராஜா, சங்கர் உட்பட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தொ.மு.ச. சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு! ந.சண்முகசுந்தரம் தலைமை வகிக்கிறார்!

சென்னை, பிப்.23-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் கூட்டம் 17-02-2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பி.எஸ். ரவிசந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் (29-02-2024) அன்று தலைமை அலுவலகம் காமராஜ் சாலையில் பகல் 1.00 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு மு.சண்முகம் எம்.பி. (அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொது செயலாளர்), கி.நடராசன் (அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொருளார்) ஆகியோர் முன்னிலையில் மாநில பொது செயலாளர் ந.சண்முகசுந்தரம் தலைமையில் பி.எஸ்.ரவிசந்திரன் (தலைவர்), இ.தாஸ் (பொருளாளர்) வரவேற்புரையில் சமபந்தி நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் 01-03-2024, வெள்ளிக்கிழமை காலை 700 மணியளவில் முதலமைச்சர் அவர்களுக்கு மேள தாளங்களுடன் வரவேற்பு அளிப்பது, மதுரை மாநகராட்சி தாணு மாலையன் நினைவு அறக்கட்டளை இணைந்து நடத்தும் நகர்புற வீடற்றோருக்கான தங்கும் இல்லத்தில் மதிய உணவு, திருச்சிராப்பள்ளியில் உள்ள கங்காரு மனநல காப்பகத்தில் மதிய உணவு மற்றும் அனைத்து கோட்டம்(ம) எஸ்டேட் அலுவலகங்களில் மதிய அறுசுவை உணவுடன் இனிப்பு வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் நிர்வாகிகள், பொதுகுழு , செயற்குழு, மகளிர்குழு, தகவல் தொழில் நூட்பக்மூ மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாநில பொது செயலாளர் ந.சண்முகசுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சிறப்புப் பூஜைகள் நடத்துவதற்கு

# திருவாலங்காடு திருக்கோயிலில் - மண்டபம் அமைத்துத் தாரீர்!

### சட்டப்பேரவையில் வி.ஜி. இராஜேந்திரன் கோரிக்கை!

சென்னை, பிப்.23 -

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது, திருவள்ளூர் தொகுதி கழக உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் , "திருவாலங்காடு திருக்கோவிலில் சிறப்புப் பூஜைகள் நடத்துவதற்கு - அங்கு உள்ள காலி இடத்தில் மண்டபம் கட்டித் தாரீர்!" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**வி.ஜி.ராஜேந்திரன்:** ரத்தின சபையில் ஒன்றான திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு திருக்கோயில் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்திய முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



இந்தக் கோயிலில் வாரந்தோறும் நடைபெறும் மாந்தீஸ்வரர் பூஜையில் நிறைய பக்தர்கள் கலந்து கொண்டு மாந்தி பூஜை செய்வார்கள். இதன்மூலம் திருக்கோயிலுக்கு வாரந்தோறும் ரூ.6 லட்சம் வருமானம் கிடைக்கிறது. இந்த மாந்தி பூஜைக்கு ரூ.1,600 கட்டுவதற்கு பக்தர்கள் இட நெருக்கடியான இடத்தில் நீண்ட வரிசையில் காத்திருக்கக் கூடிய சூழல் இருக்கிறது. எனவே, காலியாக உள்ள இடத்தில் மண்டபம் அமைத்து சிறப்பு பூஜை செய்வதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** பஞ்சசபை என்று போற்றப்படுகின்ற ஐந்து திருக்கோயில்களில் ஒன்றான திருவாலங்காடு, வடராண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு நடைபெற்ற அனைத்து திருப்பணிகளுக்கும் குடமுழுக்கும் காரணமான திராவிட மாடல் அரசை பக்தர்கள் அனைவரும் நெஞ்சார வாழ்த்துகின்றதைப் போல் அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் வாழ்த்தியதற்கு நன்றி. அவர் கோரிய மண்டபம் அமைப்பதற்கு சாத்திய கூறுகள் இருந்தால் இந்த ஆண்டு அந்த பணி எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றிப் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத் துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்களின் வழிகாட்டுதலோடு, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், நேமூர் ஊராட்சியில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி, ஒன்றிய கவுன்சிலர் அருணாச்சலம், பாரதி சுரேஷ் , ஊராட்சி மன்ற தலைவர் குமார், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் சுரேஷ், கிளை செயலாளர் ராஜா, ஒன்றிய துணைச் செயலாளர் வெற்றிவேல், மேற்பார்வையாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பூபாலன், ராமலிங்கம், சாமுவேல், அர்ஜூனன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை எஸ். நடராசன்

### பிப்ரவரி 23 (1984)



சோழ மண்டலத்தின் தலைநகராம் தஞ்சையில் கழகம் வளர்த்த தீரர். அய்யா – அண்ணா நெறிகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு உழைத்த சுயமரியாதைச் சுடர். சோதனைக் காலங்களிலும் கலைஞர் தலைமையில் ஏறுநடை போட்ட தோழர்.

தஞ்சை நகரச் செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தஞ்சை நகராட்சி உறுப்பினர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

மிசா கொடுமையையும் தாங்கியவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"சிதம்பரத்து நடராசர் நடனமாடுவதற்காக ஒற்றைக் காலில் நிற்கிறார். இவரும்தான் கொண்ட கொள்கையில் – எடுத்த காரியத்தை முடிப்பதில் ஒற்றைக் காலில் நிற்கக் கூடியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர்.

### தலைமைக் கழகம்

### தி.மு.க.